2012 மே 9]

சொன்னார். இப்படி வெளியேறுகின்ற கழிவுநீரைச் சுத்திகரிப்பதற்காகத்தான் 209 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே திட்டங்கள் தீட்டப்பட்டு, 5 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, இப்பொழுது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பணி முடியும் தருவாயில் இந்தக் கழிவுநீர் அப்புறப்படுத்தப்பட்டு, அது சுத்திகரிக்கப்படும். அந்தக் கழிவுநீர் உறுப்பினர் சொல்லுகின்ற பகுதியில் செல்லாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

236—

பத்திரப் பதிவு அலுவலகம்

***6053—திரு. ஆர்.என். கிட்டுசாமி:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சியில் புதிய பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு வருவாய் மாவட்டம், ஈரோடு பதிவு மாவட்டத்திலே, மொடக்குறிச்சியிலே புதிதாக பதிவு அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.*

[2012 மே 9

திரு. ஆர்.என். கிட்டுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க அயராது உழைத்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியில், மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையிலே கலை—அறிவியல் கல்லூரி அமைக்க ஆணையிட்டதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மொடக்குறிச்சி தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றிகளை அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதி, அவல்பூந்துறையில் செயல்பட்டுவரும் பத்திரப் பதிவு அலுவலகத்தில் அதிக அளவில் பத்திரங்கள் பதிவு செய்வதாலும், முகூர்த்த நாள், அமாவாசை தினங்களில் அளவுக்கு அதிகமான அளவில் பத்திரப் பதிவு நடைபெறுகிறது. இரவு நேரங்கள் வரையில் அந்தப் பத்திரப் பதிவு நடந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்தக் கூட்ட நெரிசலைத் தவிர்க்கின்ற நோக்கத்தோடு, விரைவாக மொடக்குறிச்சியிலே ஒரு புதிய பத்திரப் பதிவு அலுவலகத்தைத் திறந்தால் மக்களுக்கு நன்மை பயக்கும். எனவே, அந்தளவிலே அந்தப் பத்திரப் பதிவு அலுவலகத்தைத் திறக்க வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு பதிவு மாவட்டம், ஈரோடு எண் 1, இணை சார்-பதிவாளர் எண் 2 பதிவு மாவட்டத்திலிருந்து 14 கிராமங்களைப் பிரித்து, மொடக்குறிச்சி பகுதியிலே புதியதாக அந்தச் சார்-பதிவாளர் அலுவலகம் உருவாக்கப்பட வேண்டுமென்றால், அதற்குத் தொடரும் செலவினமாக 15 இலட்சம் ரூபாயும், தொடராச் செலவினமாக 13 இலட்சம் ரூபாயும் செலவாகும் என்பதோடு மட்டுமல்லாமல், அங்கே இந்த இரண்டு சார்-பதிவாளர் அலுவலங்களிலும் பதிகின்ற ஆவணங்களின் எண்ணிக்கை 4,304. அதன்மூலம் வருகின்ற வருமானம் 6 கோடியே 46 இலட்சம் ரூபாய். இதைப் பிரித்து புதிதாக மொடக்குறிச்சியிலே ஒரு சார்-பதிவாளர் அலுவலகம் அமைக்கப்பட்டால் அந்த

இரண்டு சார்-பதிவாளர் அலுவலகங்களிலும் ஏற்கெனவே பதியப்படும் ஆவணங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவதுடன், அரசுக்கு வருகின்ற வருவாயும் குறைந்து, புதிதாக உருவாக்கப்படுகின்ற, மொடக்குறிச்சியிலே பதிகின்ற ஆவணங்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் குறைவாகத்தான் இருக்குமென்ற காரணத்தால், அங்கே புதிதாக சார்-பதிவாளர் அலுவலகம் திறப்பதற்கு தற்போது எந்தக் குறிப்பும் இல்லை என்பதுடன், தற்போது, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகமான சார்-பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

திரு. ஆர்.என். கிட்டுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மொடக்குறிச்சி தொகுதி, அவல்பூந்துறையிலே சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரத்தால் அதைத் திறந்து வைக்க வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 237, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

237—

நியாய விலைக் கடை

***8793—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, வடுகப்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாகச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?